# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/ தீர்மானம் எண்.19 /தேதி 1.12.2016.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – 50வது மாநில பொதுக்குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானம் – மின்விநியோக பிரிவுகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் உறுதி அளித்திட்டபடி, அனுமதித்திட வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: 1. மாநில பொதுக்குழு தீர்மானம் கடித நாள் 21.07.2016.
2. மாநில செயற்குழு நாள் 26.11.2016.

---

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 50வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீது வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மாநில செயற்குழு கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

**தீர்மானம்–19**

மின்சார சட்டம் 2003, தகவல் அறியும் உரிமைச் சட்டம், விழிப்புணர்வு குழுக்கள் மற்றும் சமூக அமைப்புகள் போன்றவை காரணமாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு பெருகியுள்ளது. இதனை எதிர்கொள்ள மின்சார ஒழுங்குமுறை ஆணையமும், வாரியமும் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்பட அறிவுறுத்தியும், அமல்படுத்தியும் வருகின்றது. பல்வேறு மத்திய, மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தியும், இது தொடர்பாக பல்வேறு அறிக்கைகள் பல மட்டங்களில் கேட்கப்பட்டும் விநியோக பிரிவுகளின் பொறியாளர்களின் பணிச்சுமை பண்மடங்கு பெருகியுள்ளது.

வாரியப் பணிகளை மேற்கொள்ள பணியாளர்களுக்கு பணிப்பளுவை நிர்ணயித்து சட்ட ரீதியான ஒப்பந்தங்களை தொழிற்தகராறு சட்டத்தின் அடிப்படையில் வாரியம் ஏற்படுத்தி வருகின்றது. ஆனாலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்களை முழுமையாக வாரியம் நிரப்பாமல் சுமார் 30 முதல் 40% வரை பணியிடங்களை காலியாக வைத்துள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

மேற்கூறியவைகளால் விநியோகப்பிரிவு பணிகளும், பிரிவுப் பொறியாளர் பணிகளும் பன்மடங்கு அதிகரித்து வெகுவான ஆழமாக பாதிப்புகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு பொறியாளர் சங்கம் வாரியத்துடன் பலசுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியதை தொடர்ந்து வாரியம், மண்டல தலைமைப் பொறியாளர்களிடமிருந்து தொழில்நுட்ப உதவியாளர் பணித்தேவைக்கான அறிக்கைகள் பெற்றும் வேலைப்பளு ஒப்பந்தத்தில் ஒவ்வொரு விநியோகப்பிரிவுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை அனுமதித்திட ஏற்றுக்கொண்டது. அதன் முதற்கட்டமாக நகர்புற விநியோகப்பிரிவுகளுக்கு 2009ல் ஏற்படுத்தப்பட்ட வேலைப்பளு ஒப்பந்தத்தில் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் அனுமதிக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்கு பின்னர் மற்ற விநியோகப்பிரிவுகளுக்கும் இதனை விரிவு படுத்திட பேச்சுவார்த்தையின்போது வாரியம் ஏற்றுக்கொண்டது.

வாரியம் ஏற்றுக்கொண்டபடி அனைத்து விநியோகப் பிரிவுகளுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் வழங்கிட பலமுறை கேட்டுக்கொண்டும், பேச்சு வார்த்தை நடத்தியும் தாமதிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து பல நேரடி நடவடிக்கைகளை பொறியாளர் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

**கடைசியாக மதிப்பிற்குரிய வாரியத்தலைவர் அவர்கள் வாரிய நலன் கருதியும், சங்கத்தின் நியாயமான கோரிக்கையை ஏற்றும் 23.02.2016 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இதனை முழுமையாக ஏற்றுக்கொண்டு வருகின்ற வேலைப்பளு ஒப்பந்தத்தில் அமல்படுத்திட பரிந்துரைத்திடுவதாக எழுத்து பூர்வமாக உத்தரவு வழங்கியுள்ளார்கள்.**

எனவே, பொதுமக்கள் சேவை சிறந்திடவும், பிரிவுப் பணிகளில் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் சிறந்திடவும் நகர்புற மின்விநியோக பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்டது போன்றே பிற மின்விநியோக பிரிவுகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவி வாரியத்தலைவர் பரிந்துரைத்து அமல்படுத்திட உறுதி அளித்திட்டபடி, அனைத்து விநியோக பிரிவுகளுக்கும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் அனுமதித்திட வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

03/11

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

<u>நகல்</u>

இயக்குநர் / நிதி / த.மி.உ.மற்றும் ப.கழகம்.
செயலாளர் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
இயக்குநர் / விநியோகம் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
உறுப்பினர்கள் / வேலைப்பளு குழு / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.